கூடுதல் மாவட்ட நீதிமன்றம், (விரைவு நீதிமன்றம்),தேனி

MCOP.No.60/2018

நாள் : 18.08.2022

ம.சா.1.திரு.வீர்ராஜ், த/பெ. ராமசாமி மீண்டும் அழைக்கப்பட்டார் . சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டார்.

**<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை . நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை. எனக்கு யாருடைய தவறால் விபத்து நடந்தது என்ற விபரம் நேரடியாக தெரியாது. எனது மகனும் , மற்ற குடும்பத்தினரும் தேனியிலிருந்து வீரபாண்டி கோவிலுக்கு நடந்து சென்றபோது விபத்து நடந்ததாக முதல் தகவல் அறிக்கையில் குறிக்கப்பட்டிருக்கிறது. என் மகன் வாகனம் வருவதை கவணிக்காமல் திடீரென்று சாலையை குறுக்கே கடந்ததால் விபத்து நடந்தது என்றால் தவறு . ஆட்டோ டிரைவர் விபத்து நடந்தபோது சாலைவிதியை கடைபிடித்து கவனமாக வாகனத்தை ஓட்டிவந்தார் என்றால் தவறு . ஆட்டோ டிரைவரின் கவனக்குறைவால் விபத்து நடக்கவில்லை என்றால் தவறு. கிரிமினலின் வழக்கின் முடிவைப்பற்றி எனக்கு தெரியாது. அதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை . ஆட்டோ டிரைவர் விபத்து சமயத்தில் மதுபோதையில் இருந்ததாக சொல்வது தவறு. விபத்தை ஏற்படுத்திய வாகனம் காப்பீட்டு விதிமீறல் செய்திருக்கிறது என்றால் தவறு . காப்பீட்டு விதி மீறல் இருப்பதால் 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்கவேண்டியதில்லை என்றால் தவறு . ஆட்டோ உரிமையாளரான முதல் எதிர்மனுதாரர் மட்டுமே இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் தவறு . என் மகன் சம்பவ சமயத்தில் பள்ளியில் படித்துக்கொண்டிருந்தார் . விபத்து சமயத்தில் என் மகனுக்கு வருமானம் இல்லை. என் மகன் சராசரியாக

படித்துக்கொண்டிருந்த மாணவன் என்றால் தவறு . எனது மனுவில் பல்வேறு தலைப்புகளில் நான் கேட்டிருக்கும் இழப்பீட்டு தொகையின் அளவு அதிகம் என்றால் தவறு. 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து நான் தாக்கல் செய்த மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் தவறு.

| |
|---|
| திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டது . அவரால் சரி என் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது. |
| கூடுதல் மாவட்ட விரைவு நீதிபதி<br>தேனி |